திரு. ஆர்.என். கிட்டுசாமி: அந்த வெளிவட்டச் சாலைக்கு அருகிலே மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட லக்காபுரம் ஊராட்சியிலுள்ள சோலார் என்னுமிடத்தில் சுமார் 54 ஏக்கர் நிலம் அங்கிருக்கிறது. அந்த நிலத்திலே புதிய புறநகர் பேருந்து நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-2-2013) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. திருவாளர்கள் அம்பாசிடர் பல்லவா, ஓட்டல் அசோகா மற்றும் இதா ஓட்டல் ஆகியவற்றால் தமிழ்நாடு அரசு வாணிபக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானத்தின் இரண்டாம் முறை விற்பனை மீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (வ.2) துறையின் 6-8-2012 ஆம் நாளிட்ட 152 ஆம் எண் அரசாணை(நிலை)யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

30. 2011-2012 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

31. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

32. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2012-2013)